# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் III பரீட்சை – 2025 சனவரி

## (304) நிறுவனம் மற்றுத் தனிநபர் வரியியல்

**வினா இல. 01**

**பகுதி (a)**

**என்ன பரீட்சிக்கப்பட்டது?**

இவ்வினாவில் 2023.09.25 ஆந் திகதி அவுஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்து, 2024.03.15 இல் இலங்கைக்கு மீண்டும் வந்து, 2024.03.25 இல் மீண்டும் வெளியேறிய ஒரு தனியாளின், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் (இதன் பின்னர் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) (திருத்தப்பட்ட) பிரிவு 69 இன் கீழான வதிவிட அந்தஸ்து பற்றிப் பரீட்சிக்கப்பட்டது.

அதற்கிணங்க, சட்டத்தின் பிரிவு 69 (1) இன்படி, தனியாள் ஒருவர் ஒரு வரிமதிப்பாண்டிற்காக இலங்கையில் வதிவுடையவராக இருப்பதற்கு, அவர்

a) இலங்கையில் வசிப்பவராகவும் ;

b) அவ்வருடத்தின் காலப்பகுதியில் இலங்கையில் இருப்பதுடன் அந்த இருப்பு, வருடம் ஆரம்பிக்கும் அல்லது முடிவடையும் ஏதாவது 12 மாத காலப்பகுதியில் மொத்தமாக 183 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களை கொண்டிருப்பதாகவும் ;

c) இலங்கை அரசாங்கத்தின் ஊழியர் அல்லது அதிகாரியாகவும் அவரது வாழ்க்கைத்துணை அவ்வருடத்தின் காலப்பகுதியில் வெளிநாட்டில் பணியமர்த்தப்பட்டவராகவும் ; அல்லது

d) வணிகக் கப்பல் சட்டத்தின் பொருளில் அந்தத் தனியாள் இலங்கை கப்பலில் பணியமர்த்தப்பட்டு அக்காலப்பகுதியில் பணியாற்றுபவராகவும் இருத்தல் வேண்டும்.

**அவதானிப்புகள் :**

(1) பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர்.

(2) பெரும்பாலான பரீட்சார்த்திகள் வதிவிட விதி தொடர்பில் கேட்கப்பட்ட இவ்வினாவுக்குச் சரியாக விடை அளித்திருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகள் குறித்த நபர் இலங்கையில் வரிசெலுத்தத்தக்க வதிவைக் கொண்டுள்ளார் எனக் குறிப்பிட்டிருந்த போதிலும், அவர்கள் 183 நாள் விதியைக் குறிப்பிடத் தவறியிருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகள் இலங்கையில் வதிவாளர் ஒருவராக கருதப்படுவதற்குத் தேவையான நாட்களின் எண்ணிக்கையைப் பிழையாகக் குறிப்பிடப்பட்டிருப்பதானது, அவர்களிடம் அது பற்றிய விளக்கம் இல்லை ன்பதையே காட்டுகிறது.

**செயலாற்றுகை :** செயலாற்றுகைகள் திருப்திகரமான மட்டத்தில் அமைந்திருந்தன.

**வினா இல. 02**

**பகுதி (a)**

**என்ன பரீட்சிக்கப்பட்டது?**

இந்தப் பகுதியானது ஒவ்வொரு வரிவிதிக்கத்தக்க நபராலும் 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு வரிச் (SSCL) சட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய சமூகப் பாதுகாப்பு வரி பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சித்திருந்தது. அதற்கிணங்க, இந்த வினா 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான SSCL ஐக் கணிப்பிடுமாறு கேட்டிருந்தது.

**அவதானிப்புகள் :**

(1) பெரும்பாலான பரீட்சார்த்திகள் மொத்தப் புரள்வு மீதான SSCL ஐ சரியாகக் கணிப்பிட்டிருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் SSCL சட்டத்தின் கீழான வரி வீதத்தை அடையாளங் காணத் தவறியிருந்தனர்.

**செயலாற்றுகை :** செயலாற்றுகைகள் திருப்திகரமான மட்டத்தில் இருந்தன.

**பகுதி (b)**

**என்ன பரீட்சிக்கப்பட்டது?**

இவ்வினா கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் விலைகோரப்பட்ட பொதுக் கம்பனி பங்குப் பரிவர்த்தனைகளுக்கு வரி விதிக்க 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ், விதிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனை வரி (STL) பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சித்தது. அதற்கிணங்க, வினாவானது பங்குகளின் விற்பனை மீதான STL ஐக் கணிப்பிடுவதற்கு தேவைப்படுத்தியிருந்தது.

**அவதானிப்புகள் :**

(1) பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவுக்குச் சரியாக விடை அளிக்கத் தவறியிருந்தனர்.

(2) அதிகளவானவர்கள் 0.3% இற்குப் பதிலாக 3% என வரி வீதத்தைப் பிழையாகப் பிரயோகித்திருந்தனர்.

**வினா இல. 03**

**என்ன பரீட்சிக்கப்பட்டது?**

இந்த வழக்குச் சட்டக் கேள்வியானது **தாவூத்பாய் எதிர் CGIR (1979) 4 SLTC 122** தீர்ப்பிலிருந்து வெளிவந்த வழக்குச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். 2:1 என்ற விகிதத்தில் இலாப, நட்டங்களைப் பகிர்ந்து கொள்ளும் பங்குடமை ஒன்றை நடத்திச் செல்லும் இரு பங்காளர்கள் தொடர்பான சூழ்நிலை ஒன்றில், கூறப்பட்ட வழக்கிற்கு ஏற்ப விடையளிக்குமாறு இவ்வினாவில் கேட்கப்பட்டது. முக்கியமான அம்சம் என்னவெனில், ஒரு பங்காளர் (சிறிசேன) தனது மகனுடன் பிரதான பங்குடமையில் தனக்கான இலாபப் பங்கினை பகிர்ந்து கொள்ள மற்றுமொரு உடன்படிக்கையைச் செய்துகொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

வழக்கு எதிர் CGR மற்றும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளைக் குறிப்பிடுவதன் மூலம் சிறிசேனவுக்கும் அவரது மகனுக்கும் இடையிலான உடன்படிக்கைக்கான வருமான வரிப் பிரயோகத்தை விளக்குமாறு இங்கு கேட்கப்பட்டிருந்தது.

மேற்படி வழக்கு விடயங்களின்படி, அபாஸ்பாய் தாவூத்பாய் என்பவர் அப்துல் ஹஸன் தாவூத்பாய் பங்குடமையின் ஐந்து பங்காளர்களில் ஒருவராவார். அவர் பங்குடமையின் ஐந்தில் ஒரு பங்குக்கு உரித்துடையவர் ஆவார். அவர் மேற்கூறிய பங்குடமையின் ஐந்திலொரு பங்கினை தனது பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்ள மற்றுமொரு உடன்படிக்கையைச் செய்து கொண்டார். உடன்படிக்கையின் கீழ், பங்குடமையின் மூலதனம் மற்றும் நன்மதிப்பு மேன்முறையீட்டாளர் தாவூத்தின் ஒரு சொத்தாக இருந்தது. அது அவரது தனிச் சொத்துக்களாகவே இருக்க வேண்டும். அந்தப் புதிய உடன்படிக்கையின் ஒரே சொத்து அப்துல் ஹஸன் தாவூத்பாய் பங்குடமையின் ஐந்தில் ஒரு பங்கு மட்டுமே. ஆனால் இந்த உடன்படிக்கையானது உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் மற்றும் மீளாய்வுச் சபை ஆகியவற்றால் நிராகரிக்கப்பட்டது.

முதலாவதாக, இது மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு வந்தது. அங்கு, உடன்படிக்கை ஒரு பங்குடமையின் இலாப, நட்டங்களை வேறு எதுவும் இல்லாமல் மற்றுமொரு பங்குடமையுடன் பகிர்ந்து கொள்வதாக இருந்தால், அது வலிதான ஓர் உடன்படிக்கையாக இருக்க முடியாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இறுதியாக, இந்த வழக்கு, சட்டக் கேள்வி ஊடாக உயர் நீதிமன்றத்திற்கு வந்தது. உடன்படிக்கை யானது செயற்கையானதோ, கற்பனையானதோ அல்ல எனவும், அது நமது சமூகத்தில் உண்மையாக இருப்பதும் மிகவும் பொதுவாக இருப்பதுமான ஒரு குடும்ப ஏற்பாட்டை கூட்டிணைக்கிறது எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், சட்டத்தின் 195 ஆம் பிரிவானது, ''பங்குடமை என்பது அது எழுத்துபூர்வமாக பதிவுசெய்யப்பட்டதா என்பதைப் பொருட்படுத்தாது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் <u>**இலாபம் ஈட்டும் நோக்கத்திற்காக**</u> கூட்டாக வணிகததில்'' ஈடுபடுவது எனப் பொருள்படுவதால், மேற்படி வகை உப உடன்படிக்கையை அனுமதிக்க முடியாது எனக் கூறுகிறது.

எனவே, மேற்படி பொருள் வரையறைப்படி, பிள்ளைகள் மத்தியில் ஏற்படுத்தப்படும் உப பங்குடமையானது <u>**இலாபம் ஈட்டும் நோக்கத்திற்காக**</u> கூட்டாக வணிகத்தில் ஈடுபட்டால் அது சட்டப்படி செல்லுபடியாகும்.

**அவதானிப்புகள் :**

(1) அதிகளவான பரீட்சார்த்திகள் தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குச் சட்டத்திற்கு தரப்பட்ட வினாவின் விடயங்களை எவ்வாறு பிரயோகிப்பது என்பது பற்றிப் புரிந்து கொள்ளத் தவறியிருந்தனர்.

(2) வினாவானது தீர்ப்பளிக்கப்பட்ட சட்டம் மற்றும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் தொடர்புடைய விடையைத் தேவைப்படுத்தியிருந்த போதிலும், அதிகளவான பரீட்சார்த்திகள் அவ்வாறு செய்யத் தவறியிருந்தனர்.

(3) பெரும்பாலான பரீட்சார்த்திகள் தரப்பட்ட வழக்கைப் போதுமானளவு விவரிக்கவில்லை, அவர்கள் பொருத்தமான பதிலை வழங்குவதற்குப் பதிலாக வினாவை வெறுமனே மீண்டும் எழுதியிருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகள் முறையான நியாயப்படுத்தலோ விளங்கப்படுத்தலோ இன்றி, ஒரு வலிதான பங்குடமை உள்ளது என முடித்திருந்தனர்.

(5) மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே வழக்குச் சட்டம் மற்றும் சட்டத்தின் ஏற்பாடுகளைத் தொடர்புபடுத்தி, தரப்பட்ட வழக்கின் விடயங்களைச் சரியாக இனங்கண்டு, எதிர்பார்க்கப்பட்ட விடையை அளித்திருந்தனர்.

(6) சில பரீட்சார்த்திகள், நீண்ட பந்திகளையும் வினாவை மீண்டும் எழுதியிருந்தனர். ஆயினும் விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் முற்றாகத் தவறவிடப்பட்டிருந்தன.

**செயலாற்றுகை:** பரீட்சார்த்திகளின் வழக்குச் சட்டம் பற்றிய அறிவு திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை.

## வினா இல. 04

**பகுதி (a)**

**என்ன பரீட்சிக்கப்பட்டது?**

நிறுத்திவைத்தலுடன் செலுத்த வேண்டிய வரிகளை விதிப்பதற்கு சட்டத்தின் பிரிவு II இன் கீழ் விதிக்கப்பட்ட முற்பண வருமான வரி (AIT) பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சித்தது. அதற்கிணங்க, இவ்வினாவானது, பரீட்சார்த்திகள் கீழ்வருவன தொடர்பான AIT ஐக் கணிப்பிடுமாறு கோரியது.

(1) வதிவாளருக்கான வாடகைக் கொடுப்பனவு

(2) நடப்பு ஆண்டின் இலாபத்திலிருந்து செலுத்தப்பட்ட இடைக்காலப் பங்கிலாபம்

**அவதானிப்புகள் :**

(1) அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவின் இப்பகுதிக்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை.

(2) பெரும்பாலான பரீட்சார்த்திகள் வாடகை மற்றும் பங்கிலாபக் கொடுப்பனவுக்குப் பொருத்தமான AIT வீதங்கள் தொடர்பில் அறிவைக் கொண்டிருக்கவில்லை.

**செயலாற்றுகை:** AIT பற்றிய அறிவு மோசமாக இருந்தது. இதனால் செயலாற்றுகையும் திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை.

**பகுதி (b)**

**என்ன பரீட்சிக்கப்பட்டது?**

இவ்வினா தனியாள் முற்பண வருமான வரித் (APIT) திட்டத்தின் கீழ், தொழில்தருநரின் மூன்று கடப்பாடுகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது.

**அவதானிப்புகள் :**

(1) பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவுக்கு சரியாக விடை அளித்திருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் வினாவுடன் எந்தவித சம்பந்தமும் அற்ற விடைகளை அளித்திருந்தனர்.

**செயலாற்றுகை :** செயலாற்றுகைகள் சிறப்பாக இருந்தன.

## வினா இல. 05

**என்ன பரீட்சிக்கப்பட்டது?**

இவ்வினா, பொம்மைகளைத் தயாரித்து விற்பனை செய்யும் வணிகத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனம் 2024.03.31 இல் முடிவடைந்த காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய/ (மேலதிகமாகச் செலுத்திய) பெறுமதி சேர் வரியை (VAT) கணிப்பிடுமாறு கோரியது.

**அவதானிப்புகள் :**

(1) பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடை அளித்திருந்தனர்.

(2) பொருத்தமான வரி வீதம் 18% என வினாவிலேயே தரப்பட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் தமது கணிப்பீடுகளில் 15% VAT வீதத்தைப் பிரயோகித்திருந்தனர்.

(3) அதிகளவான பரீட்சார்த்திகள் பூச்சிய வீதத்தில் விதிக்கப்பட வேண்டிய ஏற்றுமதி விற்பனைகள் மீதான VAT இனைத் தவறாக விதித்திருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய மீதி வரியைக் கணிப்பிடும்போது, பொதுவான அலுவலகச் செலவினங்களைத் தவறாக உள்ளீட்டுச் செலவாகக் கோரியிருந்தனர்.

(5) குறிப்பிடத்தக்க அளவிலான பரீட்சார்த்திகள் பொறுப்பான வழங்கல் மற்றும் பூச்சிய வீத வழங்கல் ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாட்டைப் புரிந்துகொள்ளத் தவறியிருந்தனர்.

(6) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொணரப்பட்ட மிகை உள்ளீட்டு வரி மற்றும் தவணைக் கொடுப்பனவு என்பன பெரும்பாலான பரீட்சார்த்திகளால் கழிக்கப்பட்டிருந்தன.

(7) அதிகளவான பரீட்சார்த்திகள் கணிப்பீடுகள் ஊடாக எதைப் பெற்றுள்ளார்கள் என்பதைக் குறிப்பிடாததால் கணிப்பீடுகளின் தொடர்புடைய தலைப்புகளுக்கான புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர்.

(8) கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் VAT திரட்டின் சரியான வடிவத்தைப் புறந்தள்ளி, பேரேட்டுக் கணக்கு வடிவத்தில் வினாவுக்கு விடை அளித்திருந்தனர்.

(9) சில பரீட்சார்த்திகள் புள்ளித் திட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்ட சகல படிமுறைகளையும் பின்பற்றாது சரியான விடையைப் பெற்றிருந்தனர்.

(10) VAT இன் உள்ளீட்டு – வெளியீட்டுப் பொறிமுறை தொடர்பான அறிவு பெரும்பாலான பரீட்சார்த்திகளால் விளங்கிக் கொள்ளப்பட்டிருந்தது.

**செயலாற்றுகை :** VAT பற்றிய அறிவு சிறப்பாக இருந்தது.

## வினா இல. 06

**என்ன பரீட்சிக்கப்பட்டது?**

இவ்வினா திரட்டுகளைச் சமர்ப்பித்தல், காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள் போன்றவற்றை உள்ளடக்கிய வரி நிருவாகம் தொடர்பான அடிப்படை அறிவைப் பரீட்சித்தது. அதற்கிணங்க, பரீட்சார்த்திகள் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டனர்.

(1) வரிமதிப்பாண்டு 2023/24 இற்காகச் செலுத்த வேண்டிய மதிப்பிடப்பட்ட வரிக் கூற்றினை (SET) தாக்கல் செய்ய வேண்டிய உரிய திகதி

(2) வரிமதிப்பாண்டு 2023/24 இற்கான காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகளுக்கான உரிய திகதிகள்

(3) வரிவிதி நட்டமொன்று காணப்படும்போது, வரி செலுத்துநர் வருமான வரித் திரட்டைத் தாக்கல் செய்ய வேண்டுமா என்பது

(4) "அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள்'' ஆக இருக்கக்கூடிய நபர்கள்.

**அவதானிப்புகள் :**

(1) பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவின் சகல நான்கு பகுதிகளுக்கும் விடையளிக்க முயற்சிக்கவில்லை.

(2) SET ஐ தாக்கல் செய்வதற்கான உரிய திகதி பற்றி பல பரீட்சார்த்திகள் அறிந்திருக்கவில்லை.

(3) அதிகளவான பரீட்சார்த்திகள் வரியியலில் முக்கியமான அறிவாகக் கருதப்படக்கூடிய காலாண்டுத் தவணைக் கட்டணக் கொடுப்பனவுத் திகதிகள் பற்றிய வினாவுக்கு விடையளிக்கத் தவறியிருந்தனர்.

(4) வரிவிதி நட்டமொன்று காணப்படும்போது, வருமான வரித் திரட்டைத் தாக்கல் செய்யும் சரியான நிலைமை பற்றி பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் தெரிந்திருக்க வில்லை.

(5) அதிகாரம் அளிக்கப்பட்ட நபர்களாக செயற்படக்கூடிய நபர்கள் பற்றி பெரும்பாலான பரீட்சார்த்திகளால் ஏற்பிசைவு செய்யப்படவில்லை. எவ்வாறாயினும், குறித்தளவு பரீட்சார்த்திகள் அரசியல்வாதிகளின் பெயர்கள் போன்ற சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

**செயலாற்றுகை :** வரி நிருவாகம் தொடர்பான செயலாற்றுகைகள் மிகவும் மோசமாக இருந்தன.

## வினா இல. 07

**என்ன பரீட்சிக்கப்பட்டது?**

இவ்வினா சட்டத்தின் பிரிவுகள் 53 தொடக்கம் 56 வரையானவை தொடர்பில் பங்குடமை வரி விதிப்பு தொடர்பான அடிப்படை அறிவைப் பரீட்சித்தது. இங்கு வரிமதிப்பாண்டு 2023/24 இற்காக பங்குடமையால் செலுத்தப்பட வேண்டிய வருமான வரியை கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இது கீழ்வருவனவற்றை உள்ளடக்குகிறது.

(1) பங்காளர்களின் சம்பளங்கள்

(2) கட்டடத்திற்கான சோலைவரி

(3) கணக்கீட்டுத் தேய்மானம்

(4) நன்கொடை

(5) பிற வருமானம்

**அவதானிப்புகள் :**

(1) பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் இவ்வினாவுக்கு அரைவாசி அளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

(2) புத்தகத் தேய்மானத்திற்கான சரியான செய்கை, அதற்கான மூலதன விடுதொகையைக் கோருதல், பங்காளர்களின் சம்பளங்கள், மற்றும் நன்கொடைகள் என்பன பெரும்பாலான பரீட்சார்த்திகளால் சரியாகச் சீராக்கம் செய்யப்பட்டிருந்தன.

(3) எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் மொத்த வரியை தவறாக மீண்டும் சேர்த்திருந்தனர். இது பங்குடமை வருமானத்தைக் கணிப்பதில் 50% மாத்திரம் அனுமதிக்கத்தகாததாகும்.

(4) சில பரீட்சார்த்திகள் முதலீட்டு வருமானம் மற்றும் அதற்கான WHT கோரிக்கை ஆகியவற்றைச் சரியாகக் கணிப்பிடவில்லை.

(5) பல பரீட்சார்த்திகள் வணிக இலாபச் சீராக்கத்துடன் தொடர்ந்தும் குழப்பமடைந்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் இலாபத்துடன் மீண்டும் சேர்க்கப்பட வேண்டிய செலவினங்களைக் கழித்தும் கழிக்கப்பட வேண்டிய வருமானத்தைச் சேர்த்துமிருந்தனர்.

(6) சில பரீட்சார்த்திகள் நன்கொடைகளை மீண்டும் கணக்கீட்டு இலாபத்துடன் சேர்க்கவில்லை என்பதுடன் அவற்றை தகைமைக் கொடுப்பனவுகளாக தவறாகக் கழித்திருந்தனர். அத்துடன் சிலர் தகைமைக் கொடுப்பனவுகளின் கீழ் நன்கொடையைப் புறக்கணித்திருந்தனர்.

(7) முதலாவது 1,000,000/- ரூபாவை 0% இலும் மீதியை 6% இலும் என பல பரீட்சார்த்திகளால் சரியாக வரிவிதிப்பு செய்யப்பட்டிருந்தன. சில பரீட்சார்த்திகள் வரி வீதங்கள் தொடர்பில் தமது அறிவை நிகழ்நிலைப்படுத்தாததைக் காணக்கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் பங்குடமைக்கு வரிவிதிக்க கம்பனி வரி வீதம் 30% இனையும் படிமுறை வீதங்களையும் பயன்படுத்தியிருந்தனர்.

(8) சில பரீட்சார்த்திகள் 0% இல் வரி விதிக்காது, பங்குடமை விடுதொகையாக ரூபா 1,000,000/- இனைத் தவறாகக் கோரியிருந்தனர்.

**செயலாற்றுகை :** பங்குடமை வரிவிதிப்பு பற்றிய அறிவு சிறப்பாக இருந்தது.

## வினா இல. 08

**என்ன பரீட்சிக்கப்பட்டது?**

வரிமதிப்பாண்டு 2023/24 இற்கான நிறுவன வரிவிதிப்பு பற்றிய அடிப்படை அறிவு இங்கு பரீட்சிக்கப்பட்டது. அதற்கிணங்க, வினாவானது கீழ்வருவனவற்றைக் கேட்டிருந்தது.

(1) வதிவுள்ள கம்பனி ஒன்றின் வரிமதிக்கத்தக்க வருமானம், வரிவிதி வருமானம், செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி, செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) வரி ஆகியவற்றைக் கணிப்பிடுதல்.

(2) கம்பனியானது வெளியீடு செய்யும் வணிகத்தில் ஈடுபடும்போது, வருமான வரி வீதத்தைத் தீர்மானித்தல்

(3) வணிக இலாபத்தை உறுதிப்படுத்துவதில் சட்டத்தின் பிரிவு 10 இன் கீழான பொதுவான கழிப்பனவுகள், பிரிவு 11 இன் கீழான பிரதான கழிப்பனவுகள், பிரிவு 12 தொடக்கம் 19 வரையானவற்றின் கீழான குறிப்பான கழிப்பனவுகள் ஆகியவற்றைப் பிரயோகிப்பதில் உள்ள நடைமுறை அம்சங்களை மதிப்பிடுதல்.

**அவதானிப்புகள் :**

(1) **சராசரியான புள்ளிகள் பெறப்பட்டன:**

பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடை அளித்திருந்தனர். பெரும்பாலானவர்கள் இவ்வினாவுக்கு சராசரி அளவிலான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

(2) **முன்வைப்பு வடிவம்:**

நிறுவன வருமான வரிக் கணிப்பீட்டின் சட்டநியதி உள்ளடக்கத்தின் இனங்காணலும் முன்வைப்பும் அதிகளவான பரீட்சார்த்திகளால் புரிந்துகொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் சட்டநியதி உள்ளடக்கங்கள் மற்றும் நிறுவன வருமான வரிக் கணிப்பீட்டின் முன்வைப்பு ஆகியவற்றை வழங்குவதில் சிரமப்பட்டிருந்தனர்.

(3) **ஏனைய வருமானம்:**

அதிகளவான பரீட்சார்த்திகள் வணிக வருமானத்தைக் கணிக்கும்போது, கணக்கீட்டு இலாபத்திலிருந்து வட்டி மற்றும் பங்கிலாப வருமானத்தைத் தனித்தனியான வருமான மூலங்களாக நீக்கியிருந்தனர்.

(4) **புத்தகத் தேய்மானம், சொத்து விற்பனை மற்றும் மூலதன விடுதொகை:**

புத்தகத் தேய்மானமானது பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளாலும் கணக்கீட்டு இலாபத்துடன் மீண்டும் சேர்க்கப்பட்டிருந்தது. மேலும், பெரும்பாலானவர்கள் வரிமதிப்பாண்டு 2020/21 இல் கொள்வனவு செய்யப்பட்ட கணினிகள், கட்டடம், பொறி மற்றும் உபகரணம், அலுவலக உபகரணம் போன்றவற்றிற்கான மூலதன விடுதொகைகளைக் கோருவதற்கு 5 ஆண்டுகளின் சரியான வீதங்களைப் பிரயோகித்திருந்தனர்.

இயந்திர விற்பனை மீதான கணக்கீட்டு நட்டத்தைப் பல பரீட்சார்த்திகள் கணக்கீட்டு இலாபத்துடன் மீண்டும் சேர்த்திருக்கவில்லை. அத்துடன், இயந்திர விற்பனை மீதான வரிமதிக்கத்தக்க கட்டணங்கள் பெரும்பாலான பரீட்சார்த்திகளால் கணிப்பிடப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் இயந்திரம் மீதான வரிமதிக்கத்தக்க கட்டணத்தைச் சரியாகக் கணிப்பிட்டிருந்த போதிலும், அதே தொகையை, வணிகத்திலிருந்தான வரிமதிக்கத்தக்க வருமானத்தைக் கணிக்கும்போது கணக்கீட்டு இலாபத்துடன் சேர்த்திருக்கவில்லை.

(5) **அனுமதிக்கத்தகாத செலவினங்கள்:**

பணிக்கொடை ஏற்பாடு மற்றும் நன்கொடை என்பன பெரும்பாலான பரீட்சார்த்திகளால் கணக்கீட்டு இலாபத்துடன் மீண்டும் சரியாகச் சேர்க்கப்பட்டிருந்தன. ஆயினும், அதிகளவான பரீட்சார்த்திகள் LPL கிறிக்கெற் தொடருக்கான அனுசரணை, பணிப்பாளரின் பங்கேற்புக் கட்டணம், டிஜிடல் தொடர்பாடல் தொழினுட்பங்கள் தொடர்பில் அமெரிக்காவில் இடம்பெற்ற மாநாட்டிற்கான பயணச்சீட்டுக் கட்டணங்கள் SOS சிறுவர் கிராமத்தின் இலவச விளம்பர வெளியீடு ஆகியவற்றுக்கான சரியான செய்கைகளைச் செய்வதற்குத் தவறியிருந்தனர்.

(6) **அனுமதிக்கத்தக்க செலவினங்கள்:**

பணிக்கொடைக் கொடுப்பனவு பெரும்பாலானவர்களால் கோரப்பட்டிருந்தது.

(7) **முதலீட்டு வருமானம்:**

நிலையான வைப்புக்கான வட்டியைப் பல பரீட்சார்த்திகளும் முதலீட்டு வருமானமாகச் சரியாகக் கவனத்திற் கொண்டிருந்தனர். மேலும், சில பரீட்சார்த்திகள் முதலீட்டு வருமானமாக, WHT கழிக்கப்பட்ட பங்கிலாப வருமானத்தை தவறாக கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளனர்.

(8) **தகைமைக் கொடுப்பனவுகளும் நிவாரணங்களும்:**

அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட நன்கொடையை பல பரீட்சார்த்திகளும் சரியாகக் கோரிக்கை யிட்டிருந்தனர். ஆயினும், அங்கீகரிக்கப்பட்ட தருமஸ்தாபனத்திற்கான நன்கொடையானது, வரிவிதி வருமானத்தின் 1/5 பங்கு அல்லது ரூபா 500,000/- ஆகியவற்றில் எது குறைவானதோ அந்த வரையறைக்குட்பட்டது என்பதை பல பரீட்சார்த்திகளும் புரிந்து கொண்டிருக்கவில்லை.

(9) **வரி வீதத்தை இனங்காணல்:**

சரியான வரி வீதம் 30% என்பதை பெரும்பாலானவர்கள் இனங்கண்டிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் கம்பனிக்கு வரி விதிக்க இன்னமும் படிமுறை வீதங்களை (6% - 36%) பிரயோகித்திருந்தனர்.

(10) **வரிச் செலவை இனங்காணல்:**

பெரும்பாலானவர்களால் காலாண்டுத் தவணைக் கொடுப்பனவு வரிச் செலவாகக் கோரிக்கை இடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரியை அதிகமானவர்கள் கோரிக்கையிடவில்லை.

**செயலாற்றுகை :** ஒட்டுமொத்த செயலாற்றுகைகள் சிறப்பாக இருந்தன.

## வினா இல. 09

**என்ன பரீட்சிக்கப்பட்டது?**

இவ்வினா மென்பொருள் பொறியியலாளராகப் பணியாற்றும் ஒரு வதிவுள்ள தனியாளின் வரிமதிப்பாண்டு 2023/24 இற்கான முற்பண வருமான வரியை மதிப்பிடுமாறு கேட்டிருந்தது. வருமான மூலங்கள் ஊழியத்திலிருந்தான வருமானத்தையும் வணிகம் மற்றும் முதலீட்டிலிருந்தான வருமானத்தையும் உள்ளடக்கியுள்ளன.

**அவதானிப்புகள் :**

பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடை அளித்திருந்தனர். தனியாளுக்கான வரிவிதிப்பு பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு இங்கு பரீட்சிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் அரைவாசிக்கும் அதிகமானதைப் பெற்றிருந்தனர்.

அவதானிப்புகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

**(a) ஊழிய வருமானம்:**

(1) பெரும்பாலான பரீட்சார்த்திகள் மொத்தச் சம்பளத்தை ஊழிய வருமானத்தில் உள்ளடக்கியிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் தமது கணிப்பீடுகளுக்கு மாதாந்தச் சம்பளத்தை மாத்திரம் கவனத்திற் கொண்டிருந்தனர்.

(2) முன்னைய ஆண்டில் செலுத்தப்பட்ட மிகையூதியம் பல பரீட்சார்த்திகளால் நடப்பு ஆண்டின் ஊழிய வருமானத்தில் சரியாக உள்ளடக்கப்பட்டிருந்தது.

(3) பல பரீட்சார்த்திகளாலும் பயணக் கொடுப்பன மற்றும் வாகனக் கொடுப்பனவு ஆகியன ஊழிய வருமானமாகச் சரியாகக் கவனத்திற் கொள்ளப்பட்டிருந்தன.

(4) குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் APIT ஐ ஊழிய வருமானத்திலிருந்து கழித்திருந்தனர்.

**(b) வணிக வருமானம்:**

(1) குருநாகலில் உள்ள தென்னந் தோட்ட விவசாயத்திலிருந்து பெறப்பட்ட வணிக வருமானம் விலக்களிக்கப்பட்ட ஒரு வருமானம் ஆகும். எவ்வாறாயினும், இந்த விலக்களிப்பு பெரும்பாலான பரீட்சார்த்திகளால் ஏற்பிசைவு செய்யப்படவில்லை.

(2) விவசாயத்திலிருந்தான வணிக வருமானத்தைக் கணிப்பிடுவதற்காக நேரத்தைச் செலவிட்டமை பரீட்சார்த்திகளுக்கு இழப்பாக இருந்தது.

(3) IT சேவைகளிலிருந்து வரும் தற்காலிக சேவை வருமானமானது தெளிவாக வணிக வருமானமாக வேறுபடுத்தி இனங்காண்படவில்லை. மேலும், அதிகளவான பரீட்சார்த்திகள் அதனை முதலீட்டு வருமானத்தின் கீழ் வகைப்படுத்தி, வணிக வருமானத்திலுள்ள ஒரு விடயமாக உள்ளடக்கியிருந்தனர்.

**(c) முதலீட்டு வருமானம்:**

(1) பல பரீட்சார்த்திகளால் நிலையான வைப்பு வட்டியானது மொத்தமாக்கப்பட்டதன் பின்னர் முதலீட்டு வருமானமொன்றாக கணக்கிற் கொள்ளப்பட்டிருந்தது.

(2) பல பரீட்சார்த்திகள் விலைகோரப்பட்ட கம்பனிப் பங்குகளின் பங்கிலாபத்தை விலக்களிப்பு வருமானமாக இனங்காணத் தவறியிருந்தனர்.

(3) முதலீட்டு வருமானமாக மொத்த வாடகை வருமானத்தை இனங்காண்பது திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

**(d) பொதுவான விடுபாடுகளும் தவறுகளும்:**

(1) குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகளால் ரூபா 1,200,000/- ஆனது தனிப்பட்ட நிவாரணமாக கோரிக்கையிடப்படவில்லை.

(2) குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் வரிப் பொறுப்பைக் கணிப்பிடாது, வரிவிதி வருமானத்திலிருந்தான வரிச் செலவுகளை தவறாக நேரடியாகக் கோரியிருந்தனர்.

(3) குறித்த சில பரீட்சார்த்திகள் 6% தொடக்கம் 36% வரையுள்ள படிமுறை வீதங்களைப் பிரயோகித்திருந்தனர். வேறு சில பரீட்சார்த்திகள் வணிக இலாபத்திற்காக படிமுறை வீதங்களை 30% இனுள் ஒருங்கிணைத்திருந்தனர்.

(4) வட்டி மீதான WHT ஆனது பல பரீட்சார்த்திகளால் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

(5) சில பரீட்சார்த்திகள் மொத்த வரிவிதிக்கத்தக்க வருமானம், தகைமைக் கொடுப்பனவு மற்றும் நிவாரணம், வரிவிதி வருமானம், மொத்த வரிப் பொறுப்பு, வரிச் செலவுகள், செலுத்த வேண்டிய மீதி வரி ஆகியவற்றை அடையும்போது தனியாள் வருமானத் திரட்டின் சரியான பாய்வினைப் பிரயோகித்திருக்கவில்லை. உதாரணமாக, தகைமைக் கொடுப்பனவுகள் மற்றும் காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகள் என்பன வரிவிதி வருமானத்திற்கு முன்னர் கோரப்பட்டிருந்தன.

(6) சில பரீட்சார்த்திகள் விடையின் எஞ்சிய பகுதியை நிறைவு செய்யாது, வரிக் கணிப்பீட்டை வரிவிதி வருமானத்துடன் நிறுத்தியிருந்தனர்.

(7) அதிகளவான பரீட்சார்த்திகள் முழு விடையையும் ஒரு தனித் தாள் ஒன்றிலேயே நிறைவு செய்ய முயற்சித்திருந்தனர். இதன் விளைவாக, சில செய்முறைகள் தெளிவில்லாது காணப்பட்டன. இதனால், இதற்கு புள்ளிகளை வழங்குவது பரீட்சகர்களுக்கு கடினமாக அமைந்திருந்தது.

**செயலாற்றுகை :** செயலாற்றுகைகள் சிறப்பாக இருந்தன.

**ஒட்டுமொத்தச் செயலாற்றுகை:**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் VAT, பங்குடமை வரிவிதிப்பு, நிறுவன வரிவிதிப்பு மற்றும் தனியாள் வரிவிதிப்பு ஆகியன தொடர்புடைய வினாக்களுக்கு திருப்திகரமான அளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், வழக்குச் சட்டம், மற்றும் வரி நிருவாகம் தொடர்புடைய பகுதிகளில் மோசமான செயலாற்றுகை காணப்பட்டது. குறிப்பாக, திரட்டுகளைச் சமர்ப்பித்தல் மற்றும் தவணைக் கொடுப்பனவுகள் தொடர்பான அறிவு மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டது.

- - - -

**மோசமாக விடை அளிக்கப்பட்டமைக்கான பொதுவான காரணங்கள் :**

(1) வரியியலிலுள்ள அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் உரிய வரிவிதிப்புச் சட்டங்களில் கவனம் செலுத்துவதை விட எண்கணிதக் கணிப்பீடுகளில் கூடிய கவனம் செலுத்தப்பட்டமை.

(2) சம்பந்தப்பட்ட வரிச் சட்டங்கள் மற்றும் அத்தகைய சட்டங்களுக்கான திருத்தங்கள் பற்றிய போதிய தெளிவின்மை.

(3) வினாக்களுக்கு விடையளிப்பதற்கு முன்னர் வினாத்தாளை வாசிப்பதில் போதிய கவனம் செலுத்தாமை. இது வினாவைச் சரியாகப் புரிந்துகொள்ளாது வினாவின் முக்கிய தேவைப்பாடுகளை மறக்கடிக்கிறது.

(4) பரீட்சைத் திறன்களை மேம்படுத்த உதவுகின்ற கடந்த கால வினாத்தாள்கள் மற்றும் மாதிரி விடைகளில் போதிய கவனம் செலுத்தாமை.

(5) அதிகளவான அடிப்படைக் கோட்பாடுகளும் வரிவிதிப்புச் சட்டங்களும் முறையாக விளங்கப்படுத்தப்பட்டுள்ள பாடப் புத்தகத்தில் கூடியளவு கவனம் செலுத்தாமை.

(6) வினாத்தாளுக்கு விடையளிக்கும்போது காணப்பட்ட மோசமான நேர முகாமைத்துவம். சில பரீட்சார்த்திகள் குறைந்தளவான புள்ளிகளுக்கு நீண்ட நெடிய விடைகளை எழுதியமை.

(7) யதார்த்தமான எடுகோள்கள் தவறவிடப்படுகின்ற அதே வேளை யதார்த்தமற்ற எடுகோள்கள் மேற்கொள்ளப்படுகினமை.

(8) வடிவம் மற்றும் முன்வைப்பை உள்ளடக்கிய விடைகளை ஒழுங்கமைப்பதற்கு பரீட்சார்த்திகளை அனுமதிக்கின்ற ஒவ்வொரு வினாவினதும் உண்மையான தேவைப்பாட்டைச் சரியாக விளங்கிக் கொள்ளத் தவறியமை.

(9) தெளிவற்ற கையெழுத்துகள் விடைகளிலுள்ள விடயங்களை பரீட்சகர்கள் புரிந்துகொள்வதைக் கடினமாக்குகின்றன. சில வேளைகளில் விடைகள் மிகவும் அசுத்தமானதாக அல்லது தெளிவற்றதாக இருப்பதால் அவ்விடைகளை வாசிப்பது சாத்தியமற்றதாக அல்லது பெரும்பாலும் சாத்தியமற்றதாக இருக்கின்றமை.

(10) சில பரீட்சார்த்திகள் கணிப்பீட்டுச் செயன்முறையிலிருந்து பெறப்படுகின்ற பெறுமானங்களுக்கு ஆதரவான முறையான செய்முறைகளைக் காட்டாமை.

**மேம்படுத்தல்களுக்கான பரிந்துரைகள் :**

(1) வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு முன்னர் நேர முகாமைத்துவம் மீது கவனம் செலுத்தவும். இது வினாவில் கேட்கப்படும் முக்கிய தேவைப்பாடுகளை விளங்கிக்கொள்ள பரீட்சார்த்திகளுக்கு உதவும். இது வினாக்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் தேவையின் அடிப்படையில் முடிந்தவரை விடையைச் சுருக்கமாக அளிப்பதற்கு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது.

(2) கடந்தகால வினாத்தாள்களுக்கு விடையளித்து அவற்றை மாதிரி விடைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது பரீட்சைத் திறன்களை மேம்படுத்த உதவும்.

(3) வினாத்தாளில் உள்ள சகல பாடப்பரப்புகளும் பாடப்புத்தகத்தில் உள்ளடங்கி இருப்பதால் பாடப்புத்தகத்தில் முழுக் கவனம் செலுத்தவும். பாடப் புத்தகத்தில் உள்ள பல்வேறு பாடப் பரப்புகளும் சோதிக்கப்படுவதற்கான சாத்தியம் இருக்கிறது என்பதை மனதில் வைத்திருப்பது முக்கியமானதாகும்.

(4) தெளிவான மற்றும் யதார்த்தமான அனுமானங்களைக் குறிப்பிடுவது விடைகளுக்கு குறிப்பிடத்தக்க புள்ளிகளைப் பெறுவதற்கு பயனுள்ளதாக இருக்கும். வினாவில் தரப்பட்ட விடயங்களை மாற்றுவதற்காக சாத்தியமற்ற அனுமானங்களை எடுப்பதற்கு பரீட்சார்த்திகள் அனுமதிக்கப்படவில்லை என்பதை ஞாபகத்தில் கொள்வது முக்கியமானதாகும்.

(5) கணிப்பீடுகளில் எண்கணித துல்லியத்தன்மையைக் காட்டிலும் வரியியலின் அடிப்படைக் கோட்பாடுகளில் கவனம் செலுத்தவும்..

(6) தேவையான இடங்களில் ஒவ்வொரு கணிப்பீட்டிற்குமான பொருத்தமான செய்முறைகளை வழங்குவதுடன் அவற்றை சம்பந்தப்பட்ட விடைகளுடன் சரியாகத் தொடர்புபடுத்தவும்.

(7) தெளிவான கையெழுத்தில் வினாத்தாளுக்கான விடைகளை எழுதுவதானது விடைத்தாள் பரீட்சகர்கள் விடயங்களைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு உதவும்.

(8) ஒரு புதிய வினாவுக்கான விடையை விடைப்புத்தகத்தின் ஒரு புதிய தாளில் எழுத ஆரம்பிக்கவும்.

(9) வினாத்தாளை ஒன்றுக்கும் மேற்பட்ட தடவை வாசிக்குமாறும் சம்பந்தமற்ற விடைகளையும் கணிப்பீடுகளையும் எழுதுவதைத் தவிர்க்குமாறும் பரீட்சார்த்திகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. இது நேரத்தை மிச்சப்படுத்தும்.

(10) எப்பொழுதும் வாசிப்பதற்காக வழங்கப்படும் 15 நிமிடங்களையும் வினாத்தாளை முழுமையாக வாசிக்கப் பயன்படுத்துவதுடன் அதன் பின்னர் ஒவ்வொரு வினாவுக்குமான விடைகளை தன்னம்பிக்கையுடன் எழுதுவதற்கு ஆரம்பிக்கவும்.

- * * * -